# போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

## III-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

## SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE,

MAY 30, 1922.

ந. 9 (1).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலே, 1922-ம்ஞூ மேயீ 30வ. [விலே, 3 பை.


# இந்தியா கவர்ன்மென்ட் ஆக்ட்

# ACT OF THE GOVERNMENT OF INDIA.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்டு கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆக்டுகள்.

---

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது-1922-ம்ஞூ மார்ச்மீ 1வ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனுல் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகிறது :—

## ACT No. VI OF 1922.

## 1922-ம்ஞூத்து 6-வது ஆக்ட்.

## AN ACT FURTHER TO AMEND THE INDIAN LUNACY ACT, 1912.

## 1912-ம்ஞூலத்திய இந்துதேசத்து பைத்தியக்காரர்களேக்குறித்த ஆக்டைப் பின்னும் திருத்துவதற்கான ஆக்ட்.

1912-ம்ஞூத்து 4-வது ஆக்ட்.

1912-ம்ஞூத்திய இந்துதேசத்து பைத்தியக்காரர்களேக் குறித்த ஆக்டைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனுல் விதிக்கப்படுகிறதென்னவென்ருல் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, 1922-ம்ஞூத்திய இந்துதேசத்து பைத்தியக்காரர்களேக் குறித்த (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

1912-ம்ஞூத்து 4-வது ஆக்ட்.

1912-ம்ஞூத்து 4-வது ஆக்ட் 3-வது பிரிவில் திருத்தம்.

2. (இதில் பின்ஞல் ஷை ஆக்டென்று குறிப்பிடப்படும்) 1912-ம்ஞூத்திய இந்துதேசத்து பைத்தியக்காரர்களேக் குறித்த ஆக்ட் 3-வது பிரிவிலே,—

(a) (1) குறிப்பிட்ட பகுதியில், “ சாலேயென்று ” என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக “ சாலேயென்ருவது மனேவியாதிகளுக்கான ஆஸ்பத்திரியென்ருவது ” என்னும் வார்த்தைகளே அமைத்துக் கொள்ளவேண்டும் ;

(b) (2) குறிப்பிட்ட பகுதியில், “ என்பதிலே ” என்னும் வார்த்தைக்குப் பிறகு அடியிற்கண்டதைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

“ இந்த ஆக்டினுல தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் யாதொரு அதிகாரத்தைக் கொண்டு ஆலோசனே சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் இது விஷயமாய்க் குறிப்பிடப்படும் வேறே எவையேனும் செலவுகள் சகிதமாக. ”

1912-ம்ஞூலத்து 4-வது ஆக்ட் 84-வது பிரிவில் திருத்தம்.

3. ஷை ஆக்ட் 84-வது பிரிவில், “ அல்லது ” என்னும் வார்த்தைக்குப் பிறகு அடியிற்கண்ட வார்த்தைகளேச் சேர்த்துக் கொள்ளவேண்டும் ; அவையாவன :—

“ மனோவியாதிகளால் வருந்திக்கொண்டிருக்கும் நபர்களுக்கு அந்த வியாதிகளை குணப்படுத்துவதற்கான சிகிச்சை செய்வதற்காக பாதுகாப்புச் சாலைகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்றாவது செய்யப்படுமென்றாவது தாங்கள் தெரிந்து திருப்தியடைகிற பட்சத்திலே அப்படிப்பட்ட சாலைகளை.”

1912-ம் வருஷத்து 4-வது ஆக்டில் புதிய 84A பிரிவை அமைத்துக்கொள்வது.

4. ஷை ஆக்ட் 84-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

குணப்படுத்துவதற்கான சிகிச்சை செய்வதற்காகச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடு போதுமானதாயிராவிட்டால் லைஸென்ஸை ரத்துசெய்ய அதிகாரம்.

“ 84 A. லைஸென்ஸ் கொடுக்கப்பெற்றிருக்கும் யாதொரு பாதுகாப்புச் சாலையில் குணப்படுத்துவதற்கான சிகிச்சை செய்வதற்காக ஏற்பாடு எதுவும் செய்யப்பட்டிராவிட்டாலும் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடு போதுமானதல்லவென்று பிரதேச கவர்ன்மெண்டார் அபிப்பிராயப் பட்டாலும், பிரதேச கவர்ன்மெண்டார்- அப்படிப்பட்ட ஏற்பாடு செய்வதற்காவது அப்படிப்பட்ட ஏற்பாட்டைப் பூர்த்திசெய்வதற்காக அதனுடன் யாதொரு அம்சத்தைச் சேர்ப்பதற்காவது தங்களுக்கு அவசியமாகத் தோற்றக்கூடிய காரியங்களைச் செய்யும்படி ஷை பாதுகாப்புச் சாலையின் விசாரணை வகிக்கும் நபருக்கு உத்தரவுபண்ணலாம் ; மேலும், நியாயமான ஒருகால அளவுக்குள் அந்த உத்தரவின்படி ஷை நபர் நடந்துகொள்ளாவிட்டால், பிரதேச கவர்ன்மெண்டார் அந்த லைஸென்ஸை ரத்துசெய்துவிடலாம்.”

1912-ம் வருஷத்து 4-வது ஆக்டில் புதிய 89A, 89 B பிரிவுகளை அமைத்துக்கொள்வது.

5. ஷை ஆக்ட் 89-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவுகளை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அவையாவன :—

ஆதரிப்புச் செலவை நிஷ்கரிஷை செய்வது.

“ 89A. யாதொரு பாதுகாப்புச் சாலையில் மறியல்செய்து வைக்கப்பட்ட எந்தப் பைத்தியக்காரர்களை ஆதரிப்பதற்கான செலவைச் செலுத்த யாதொரு பிரதேச கவர்ன்மெண்டார் பொறுப்புள்ளவர்களாயிருக்கிறார்களோ அந்தப் பைத்தியக்காரர்களின் ஆதரிப்புச் செலவினிமித்தம் கொடுக்கப்படத்தக்க தொகையையும், அந்தப்படி பொறுப்புள்ளவர்களாயிருக்கும் பிரதேச கவர்ன்மெண்டார்களால் இன்ன சங்கியா பரிமாணங்களின்படி அந்தத் தொகை முறையே கொடுக்கப்படத்தக்கதாகுமென்பதையும், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவுமூலமாய் நிர்ணயிக்கலாம். அப்படிப்பட்ட யாதொரு தொகையில், பாதுகாப்புச் சாலையைப் பராமரித்து வருவதன் பொருட்டும், அந்தப் பாதுகாப்புச் சாலையின் சிப்பந்திக்காகப் பிடிக்கும் மூலதனச் செலவின் பொருட்டும் கொடுக்கவேண்டிய தொகைகளும் அடங்கலாம்.

கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படத்தக்க ஆதரிப்புச் செலவு இன்னவிதமாய் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்பது.

89 B. (1) இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி யாதொரு பைத்தியக்காரருடைய ஆதரிப்புச் செலவு கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படத்தக்கதாயிருக்கும்போது, அந்தச் செலவானது—

(a) ப்ரிடிஷ் இந்தியாவில் நிலையாய் வாசஸ்தலம் ஏற்படுத்திக்கொண்டிராத யாதொரு பைத்தியக்காரரின் விஷயத்திலே, சந்தர்ப்பத்துக்கேற்றபடி சேர்த்துக்கொள்வதற்கான உத்தரவாவது 25-வது பிரிவின்படிக்கான உத்தரவாவது எந்த மாகாணத்தில் செய்யப்பட்டதோ அந்த மாகாணத்தின் பிரதேச கவர்ன்மெண்டாராலும்,

(b) ப்ரிடிஷ் இந்தியாவில் நிலையாய் வாசஸ்தலம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் யாதொரு பைத்தியக்காரரின் விஷயத்திலே, சந்தர்ப்பத்துக்கேற்றபடி சேர்த்துக்கொள்வதற்கான உத்தரவாவது 25-வது பிரிவின்படிக்கான உத்தரவாவது செய்யப்பட்டதற்கு முன்ஐந்து வருஷகாலமாக கடைசியாய் அந்த பைத்தியக்காரர் எந்த மாகாணத்தில் வாசஞ்செய்துகொண்டிருக்கிறாரோ அந்த மாகாணத்தின் பிரதேச கவர்ன்மெண்டாராலும், அல்லது அந்தப் பைத்தியக்காரர் ஷை கால அளவுக்கு ஏதாவது ஒரு மாகாணத்தில் வாசஞ்செய்துகொண்டிராத பட்சத்திலே, ஷை உத்தரவு எந்த மாகாணத்தில் செய்யப்பட்டதோ அந்த மாகாணத்தின் பிரதேச கவர்ன்மெண்டாராலும்,

கொடுக்கப்படத்தக்கதாகும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு பைத்தியக்காரரின் ஆதரிப்புச் செலவை யார் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதைப்பற்றி யாதொரு கேள்வி பிறக்கும் பட்சத்தில், அந்தக் கேள்வியை ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அபிப்பிராயத்துக்கு அனுப்பவேண்டும் ; அதன்மேல், அவர் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.”

எச். மான்க்ரீப் ஸ்மித்,
இந்தியா கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tamil Translator to Government.*

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.